1974 சனவரி 21]

*47 வினா—**திரு. வீ. கார்த்தீசன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், குட்டம் ஊராட்சிப் பகுதியில் அடங்கிய பெரிய ஊருணியை (Spring) ஆழப்படுத்தி விவசாயப் பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

Bleeding Madras variety of Handloom cloth

* 48 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the demand for Bleeding Madras varieties has increased in 1973?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1972-ம் ஆண்டிலும் சனவரி முதல் ஜூலை 1973 வரை ஏற்றுமதி செய்யப் பட்டவகைளின் மதிப்பு வருமாறு:

1972	..	15-55 இலட்சங்கள்
ஜனவரி முதல் ஜூலை 1973 வரை	..	10-55 ,,

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேயிருந்து இந்த வண்ணம்மாறும் கைத்தறி துணிகளுக்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாடுகளிலே சந்தை மிகவும் அதிகமாக இருந்தது. ஆனால் அது இப்பொழுது குறைந்திருப்பதாகத் தெரிகிறது. எனவே புதிய சந்தைகளை ஏற்படுத்த மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நமது அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இடைக்காலத்திலே ஒரு மந்த நிலை ஏற்பட்டது. இப்பொழுது சுமார் 15½ இலட்சம் ரூபாய்க்குச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எந்தெந்த நாடுகளிலே இதுபோன்ற வாய்ப்புகள் இருக்கின்றனவோ அங்கே முயற்சிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த 'ப்ளீடிங் மெட்ராஸ்'க்கு அமெரிக்க நாட்டிலே நிறைய கிராக்கியிருந்ததும், இப்பொழுது மந்த நிலை ஏற்பட்டிருப்பதும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும், மேலும் நம்முடைய